ஸ்ரீ உசகாரணேய கீதங்கள்.

R6
N28
186101

887

எண் 60.　　　　5,000 பிரதிகள்.

அஹிம்ஸா மணி 4　　　　ஜுலை 1928.

ஜீவகாருண்ய சக்தி துணை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 AUG 1928
MADRAS

சந்தேகங்களுக்கு விடை.

# ஜீவகாருண்ய - - - கீதங்கள்

2141
758-854

கொல்லா விரதம் குவலயமெல்லா மோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பராபரமே
(தாயுமானுர்.)

வெளியிட்டவர்:
...ஜீவரக்ஷா பிரசாரக சபையார்,
436, தங்கசாலை வீதி, மதராஸ்.

...n Sahib Street., Mount Road., Madras.

RL
N28.
18619

# அம்மன் சக்தி சொரூபம்.

அம்மன் எல்லா உயிர்களையும் பெற்றெடுத்த தாய். தன் குழந்தைகளையே பலியாகக் கொள்ளும் தாயும் உண்டோ? அம்மன் நம்மையும் பிற வாயில்லா உயிர்களையும் ரட்சிக்கக் கலலை கொண்டவள். அம்மனுக்கு அலற அலற உயிர்களைப் பலி யிடுபவர் அவள் குழந்தைகளைக் கொன்ற சிசுஹத்தி பாபத்திற்கும் அவள் சாபத்திற்கும் ஆளாகின்றனர். இது சத்தியம்.

புஷ்பம் பால் பழம் பொங்கல் தேங்காயால் அவளைப் பூஜிப்பதே சிறந்த புண்ணியந்தருமுறை குளிக்கப் போய் சேற்றைப் பூசிக்கொண்டாற் போல் கொலையால் பூஜை செய்து பாபம் சம்பாதிப்பது என்ன மதியீனம்! அம்மனை ஜீவகாருண்யம் நிரம்பிய மனத்துடன் போற்றி உருக்கத் துடன் பிரார்த்தனை செய்யுங்கள். அவள் உங்களையும் உங் கள் வம்சத்தையும் காப்பாற்றுவது திண்ணம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை 600 008

OFFICE OF THE REGISTRAR
4 AUG 1928
MADRAS

## உங்கள் சந்தேகங்களுக்கு விடை.

1. அம்மன் ஆடு கேட்கிறுளே என்று சொல்லுகிறீர்கள். அம்மன் உங்களை உங்கள் பிரார்த்தனையை நிறைவேற்றக் கேட்கிறுளே யன்றி, தன் பசி தீருவதற்கு உங்களுடைய ஆட்டைக் கேட்பதில்லை. சுயநலமுள்ள பூஜாரிகளாலும் நமது பெண்மக்களின் அறியாமையாலும் ஏற்பட்ட வழக்கமேயன்றி அது வேறில்லை. ஆடு கோழி அம்மனுக்கு வேண்டுமென்றுல் அந்த ஆடு கோழிகளை அம்மன் முன்னேயே ஈசுவரன் ராமன் முதலான தெய்வங்களுக்கு நைவேத்யம் செய்வதுபோல் ஏன் வெட்டிப் படைப்பதில்லை ?

2. ஹிந்துக்களாகிய நாம் வினைப்பயனில் நம்பிக்கையுடையவர்கள். நாமும் நமது குடும்பத்தாரும் தரித்திரத்தாலோ, வியாதிகளாலோ வருத்தமுற்றுல், அவை பூர்வ ஜன்மங்களிலும் இந்த ஜன்மத்திலும் செய்த பாபங்களின் பயனுல் வருவனவேயாகும். மேலும், நாம் ஆரோக்கியமின்றி சுத்தமின்றி ஜாக்கிரதையின்றி வசிப்பதாலும் பல நோய்களுண்டாகின்றன. உண்மை இங்ஙனமிருக்க, அம்மன் நோய்களையும் கஷ்டங்களையும் கொண்டு வந்துவிடுகின்றுளென்பது முற்றிலும் அறியாமையாகும். நமது கஷ்டங்களும் நோய்களும் சர்வ வல்லமையுள்ள அம்மனுக்குப் பிரார்த்தனை செய்து கொள்வதால் நீங்குமென்பது உண்மையே. ஆனுல் அவைகளை அம்மன் நமக்குக் கொண்டுவந்து

சேர்க்கிறாள் என்பது பெருந்தவறு. அம்மன் முதலான எல்லா தெய்வங்களும் நம்மைக் காப்பாற்றுகின்ற கிருபை பொருந்தியவைகளே யன்றி, நம்மைத் துன்புறுத்துவன வல்லவென்பதை நிச்சயமாய் நம்புங்கள். எங்ஙனம் தாய் தந்தையர் தமது குழந்தைகளது குற்றங்களை மன்னித்துக் காக்கின்றார்களோ அங்ஙனே தெய்வங்களும் நம்மை ஆதரிக்கின்றன. நாம் தினந்தோறும் செய்கின்ற செயல்களால் வரும் துயரங்களையும், நோய்களையும் தெய்வங்களின்மேல் போடுதல் பெரிய அபசாரமாகும். அதனால் நாம் தெய்வ கோபத்திற்காளாவோம்.

3. உயிருக்கு உயிர் கொடுக்கவேண்டுமென்று ஒரு நியாயம் கூறுவார் சிலர். இதுவும் பெருத்த அஞ்ஞானமே. நமது சாஸ்திர புராணங்களிலும் ராமாயண பாரதங்களிலும் உயிருக்கு உயிர்கொடுத்து எவனுவது பிழைத்ததாகப் படித்திருக்கிறீர்களா? அங்ஙன மாகுமெனில், நாம் தெய்வங்களாய்க்கொண்டு தொழும் ஸ்ரீ ராமன் கிருஷ்ணனையும் விடாத சாவு நம்மை ! விடுமா? என்ன அறியாமை, என்ன மதிமோசம்! அன்றி, எவர் உயிருக்கு எந்த உயிரைக் கொடுப்பது? அறிந்து பாவம் செய்கிற மனிதன் உயிருக்கு ஒன்று மறியாச் சிறுபிராணிகளான ஆடு கோழிகளின் உயிரா பலி? கடைத்தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கின்ற நியாயமல்லவோ இது! ஆடு கோழிகளின் உயிரைக் கொடுக்க நமக்கென்ன உரிமையுண்டு? அவற்றைக் கொன்ற பாவம் நம்மைவிடுமா? அவற்றின் குடும்பத்தை நாசம் செய்யின், நம் குடும்பம் நாசமாகிவிடுமே, பிள்ளைக்கு நோய் வந்தால் தனது விரலையும் அறுத்துக் கொடுக்கச் சம்மதியாத தாய் தகப்பன்மார்

கள் வாயில்லா உயிர்களைக் கதறக் கதறக் கழுத்தறுக்கச் சம்மதிக்கலாமா ? நம் குழந்தைக்காக நாம் சாகத்துயாராயிருந்தால், தெய்வம் நமது குழந்தைகளைக் காப்பாற்றக் கிருபை செய்யலாம். ஹுமாயூன் சக்ரவர்த்தி தன் மகன் அக்பருக்காகத் தன் உயிரைக் கொடுத்துப் பிழைக்க வைத்த சரித்திரம் நீங்கள் அறிவீர்களா? இவை யெல்லாம் நாம் கடவுளிடம் வைக்கும் நம்பிக்கையின் உறுதியையும் பிரார்த்தனையின் உருக்கத்தையும் பொருத்திருக்கின்றன.

4. அம்மன் ரத்தத்தில் பிறந்தவளாயிற்றே என்று சிலர் கூறலாம். அம்மன் நம்மைப் போன்ற சாது ஜனங்களைக் காப்பாற்றும் பொருட்டும் அசுரர்களையும், துஷ்டர்களையும் சம்ஹரிக்கவும் அவதாரம் எடுத்தாள். வாயில்லா சிறு ஜீவன்களான ஆடுகோழிகளின் உயிரை உறிஞ்ச அவள் வாவில்லை. அம்மன் இப்போது கோபம் தணிந்து சாந்தமாயிருக்கிறாள். அவள் தான் எல்லா ஜீவன்களுக்கும் தாயாகவிருக்குகிறாள். சுப்பிரமணியர், ராமர், கிருஷ்ணர் முதலான தெய்வங்களும் எத்தனையோ அசுரர்களையும் துஷ்டர்களையும் கொன்றார்கள். அதற்காக நாம் அவர்களுடைய கோபந்தணிய வேண்டுமென்று பலி கொடுக்கின்றோமா? துவாபரயுகத்திலும் திரேதாயுகத்திலும் நடந்த காரியங்களுக்கும் இந்த கலியுகத்திற்கும் என்ன சம்பந்தம்? அன்றி, நாம் பலி கொடுப்பதால் கோபத்தை அதிகப்படுத்துவோமா, தணிப்போமா என்பதை நீங்களே யோசியுங்கள். பால் பழம் தேங்காய் பொங்கல் முதலிய சாத்வீகமான பதார்த்தங்களால் அம்மனை சாந்தப்படுத்த முடியுமேயன்றி ரத்தத்தைக் காட்டுவதால் சாந்தப் படுத்துகிறோமென்பது என்ன அஞ்ஞானம்!

5. பெரியோர் செய்து வந்த வழக்கமாயிற்றே என்பீர்கள். நமது சாஸ்திரங்களும் மதமும் ஒப்புக்கொள்ளாத வழக்கங்களைச் செய்து வந்தால் அவை 'பெரியோர்' செய்து வந்தனவானாலும் நீங்கள் கைவிடத்தான் வேண்டும். நீங்கள் பெரியோர் என்று சொல்லுகிறவர்கள் சாஸ்திரமறியாமல் தப்பு செய்தவர்களேயாகும். நமது தகப்பனோ பாட்டனோ நமது முன்னோர்கள் குடி முதலான கெட்ட வழக்க முடையவர்களென்பதால் நாமும் அந்த வழக்கத்தை செய்யவேண்டுமென்று அர்த்தமல்ல. எவன் கெட்ட விஷயங்களை விட்டுவிட்டு நல்ல வழக்கங்களைக் கைக்கொள்ளுகிறானோ அவனே உலகில் பெரியோனாகவும் புண்ணியவானாகவும் ஆவான். ஆகவே, அம்மனுக்கும் சாமிக்கும் பொங்கலிட்டுத் தேங்காய்ப் பழம் படைத்தலே நல்ல வழக்கமாதலால் அதையே நீங்கள் செய்யவேண்டும். உண்மையான சாஸ்திரங்களை யறிந்தவர்கள் ஆடு கோழி காவு கொடுக்கப் பயப்படுகிறார்கள் என்பதை நீங்கள் கவனியுங்கள். அவர்கள வழியில் நாம் செல்வதால் நமக்குச் சௌரவமேயன்றி கெடுதியில்லை.

6. மற்றுஞ் சிலர் ஆடு கோழிகளை நாம் கொல்லாவிட்டால் அவைகளை யென்ன தான் செய்வது என்று கேட்கிறார்கள். இவர்கள் முன்னதாகக் கடவுள் எந்தப் பிராணியையும் நாம் கொல்வதற்கென்று படைக்கவில்லை யென்பதை யுணர்ந்து கொள்க. எல்லாப்பிராணிகளையும் அன்புடன் போஷித்துக் காப்பாற்ற அறிவுள்ளவனான மனிதன் ஜன்மம் எடுத்திருக்கிறான். ஒவ்வோர் குடும்பத்தில் பத்து இருபது ஆண் பெண்கள் பிறந்து குவிந்துவிடுவதுண்டு. அதற்காகத் தாய் தகப்பனார் அவர்களை ஒழிக்க வேண்டுமேயென்று கவலைப்படமாட்டார்கள். சர்வ வல்ல

மையுள்ள ஈசுவரன் எல்லாரையும், கல்லிலுள்ள சிறு தேரை யையும் காப்பாற்றத் தயாராயிருக்கிறான். ஆகவே நீங்கள் ஆடுகோழிகளுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து ஈசுவரனிடத் தில் ஒப்புவியுங்கள். அவற்றையும் ஜீவகாருண்யமுள்ள உங் களையும் அவன் நன்கு ரட்சிப்பான்.

7. மாமிசம் உண்ணும் வழக்கமே உங்களை ஆடு கோழி காவு கொடுப்பதைக் கைவிடாமல் செய்கிறது. மாமிசம் உண்பதை நமது சாஸ்திரங்கள் கண்டிக்கின்றன. அதனால் தான் நீங்கள் அமாவாசை கிருத்திகை ஷஷ்டி ஆகிய தெய்வத்திற்குப் பிரீதியான தினங்களில் மாமிசம் உண்பதில்லை. இதனால் எப்போதும் நீங்கள் மாமிசத்தை விட்டுவிட்டிருந்தால் தெய்வத்திற்கு மிகவும் பிரீதியாகு மென்று தெரியவில்லையா ? நீங்கள் மாமிசம் மீன் புசித்தலை நீக்கிவிட்டால் ஆடு கோழி காவு கொடுப்பதும் கூடாது என்று தெரிந்து கொள்வீர்கள். முருகருக்கு ஆடும் ஓர் வாகனம் ; கோழி அவருக்குக் கொடி. திருத்தணிகைக்கும் திருப்போரூருக்கும் பழனிக்கும் போகிற நீங்கள் அவரு டைய வாகனத்தையும் கொடியையுமா கொன்று தின்பது ? ஐயோ, மகா பாவம் !

18610

8. ஊரார் பலர் கள்குடி, மாமிசந் தின்பது முதலிய கெட்ட வழக்கங்கள் மேற் கொண்டிருந்தால் நீங் அப்படிச் செய்யலாமென்று நினைக்கக்கூடாது. உலகத்தில் வேசி வீடும், கள் கடையும், கறிக் கடையும் ராமன் கால முதல் இருந்து தான் வருகின்றன வென்றாலும் அவைகளை விலக்கி மனவுறுதியுடன்நல்ல வழியில் செல்கிறவனே கடைத்தேறுகிறான். பறையனான நந்தனார் பிராமணனை விட சிறப்படைந்த விதத்தை யோசியுங்கள் !

## பெரியோர் மொழி கேளுங்கள் !

ஜீவகாருண்ய வொழுக்கத்தை நாடெங்கும் பரப்பிய மகான் ஸ்ரீ ராமலிங்க ஸ்வாமிகள் அருளியது:—

மண்ணுலகதிலே உயிர்கள் தாம் வருந்தும்
வருத்தத்தை ஒரு சிறிதெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும் நான் சகித்திடமாட்டேன்
எண்ணுறு மெனக்கே நின்னருள் வலத்தால்
இசைத்தபோ திசைத்தபோ தெல்லாம்
நண்ணும் அவ்வருத்தம் தவிர்க்க நல்வரம் தான்
நல்குதல் எனக்கிச்சை எந்தாய்

தாயுமானவர் கூறுவது:—

கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்
மற்றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே.
கொல்ல விரதங் குவலய மெல்லா மோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பராபரமே.

# ஜீவகாருண்ய கீதங்கள்.

## க. அருள்தொண்டர் செல்லல்.

(ஜோர்ஜோர என்றமெட்டு)

பல்லவி

செல்வோம், கொலை மறுக்க-செல்வோ மன்பரே!

அனுபல்லவி

தொல்லுலகிற் படுகொலைகள்
சொல்லொணுது! சொல்லொணுது! (செல்)

186|01
18401

சரணம்

மனிதரை மனிதர் சுட்டு மாய்க்கின்ருர்களே!
இனிப்பொறுக்க முடியாதையோ
இவ்வுலகிற் போர்வினைகள்! (செல்)

வாயில்லா வுயிர்களை வதைக்குங் கோரமோ!
ஆயவோ! உரைக்கப்போமோ!
அங்கமெல்லாம் பதறுதையோ! (செல்)

பூவெலாம் புனிதமுற்றுப் பொலிக சாந்தமே!
ஜீவகாருண்ய சக்தி யெங்கும்
திகழ மகிழ அகில மெல்லாம்! (செல்)

## உ. அண்ணமாரே!

("நந்தலாலா" என்ற மெட்டு)

கொலையும் புலையும் வேண்டாம் —அண்ணமாரே
பலியும் பாவமும் வேண்டாம் —அண்ணமாரே
ஆண்டவ னொருவ னன்ருே, —அண்ணமாரே
அன்பும் அருளுமன்ருே! —அண்ணமாரே

எள்ளுக்குள் எண்ணெயென —அண்ணமாரே
எங்கு மிருப்பவனே —அண்ணமாரே
ஆட்டிலுங் கோழியிலும் —அண்ணமாரே
ஆருயிராய் நிறபவனே —அண்ணமாரே
யாரை வருத்திடினும் —அண்ணமாரே
அவனை வருத்துவதாம் —அண்ணமாரே
வாயில்லாச் சீவனையே —அண்ணமாரே
வதைத்துண்ணுஞ் செயல் நன்றோ—அண்ணமாரே
துன்பம் பிறர்க் கிழைத்தே —அண்ணமாரே
தொந்தி வளர்த்தல் நன்றோ —அண்ணமாரே
இரக்கம் மனிதர் குணம் —அண்ணமாரே
இரக்கமற்ற பாவிகளோ! —அண்ணமாரே
மரக்கறி தானியமே —அண்ணமாரே
மனிதர் புசிப்பதுவே —அண்ணமாரே
நாற்றப் பிணத்தை யுண்ணல் —அண்ணமாரே
நன்றோ மனிதருக்கே —அண்ணமாரே
ஊத்தையுடலை யுண்டே —அண்ணமாரே
உம்மை வளர்த்தென்பயன்? —அண்ணமாரே
ஆடும்மை யறுத்திடின் —அண்ணமாரே
ஆஆ வென் றேயழுவீர் —அண்ணமாரே
ஆட்டைநீ ரறுக்கும்போ தண்ணமாரே—அண்ணமாரே
அவ்வுணர்வை யேனுணரீர் —அண்ணமாரே
கோழியும்மை வெட்டிடினே —அண்ணமாரே
கூகூவென் றே யழுவீர் —அண்ணமாரே
கோழியைநீ ரறுக்கும்போ தண்ணமாரே-அண்ணமாரே
குற்றத்தை யேனுணரீர் —அண்ணமாரே
பாவம் பழியல்லவோ —அண்ணமாரே
பதைபதைக்கக் கொலைபுரிதல் —அண்ணமாரே
நோவுந் துயர் பிணியும் —அண்ணமாரே
நும்முடலை வாட்டிடுமே —அண்ணமாரே

அன்பு வடிவ மன்ருே —அண்ணமாரே
ஆண்டவன் சக்தி யெல்லாம் —அண்ணமாரே
துன்பப் படைப்புகளுந் கண்ணமாரே !—அண்ணமாரே
துன்பமே தந்திடுவாள்,— அண்ணமாரே (கொலே)

---

## ரு. பலி கொடுக்காதே

(ஆண்டிப்பண்டாரம் என்ற மெட்டு)

பல்லவி.

பலி கொடுக்காதே—அப்பா
கொலே புரியாதே.

அனுபல்லவி.

ஆடு பலிகொடுத்தால்,
அத்தனையும் பாவமடா
கேடு விளேயுமடா
கெட்டப் பழக்க மடா (பலி)

சரணம்.

பாவங்கொலே யல்லவோ,
படுநரக வழி யல்லவோ,
நோவு விளேத்திடலே
நூறு நர கல்லவோ ? (பலி)

சக்தியன்னே மைந்தரடா
தங்கும் உயிர்க ளெல்லாம்.
குத்திக் கொலே புரிந்தால்
கோபங் கொதிப்பளடா. (பலி)

பஞ்சா வமிருதமும்
பழந்தேங்காய்ப் பாலமுதும்
நெஞ்சன்புடன் படைத்தால்,
நினேத்தபல ளுகுமடா. (பலி)

## அம்மன் அலறுதல்.

(ஜொண்டிச்சிந்து.)

யாரிங்கு பலியிடுதல்—பாழும்
அறிவிலிகாளது படுகொலேயே (யார்)
உயிர்களி னன்னே யாடா—எனக்கு
உயிர்க்கொலே தருவது பாவமடா (யார்)
இரக்கமென் னிதயமடா—இந்த
இரத்த பலிகண் டுள்ளம் பதைக்குதடா! (யா)
வதைத்திடல் பாவமடா—நரக
வாயி லுனேத்திறந்து விழுங்குமடா! (யா)
எவ்வுயிர்க்கும் உயிராய்—எங்கும்
இருப்பவள் என் மனம் பதைக்குதடா (யார்)
தாய்மனந் துடிக்குதடா—ஐயையோ!
தாங்கிலேன்! சேய்களின் தலேயறுத்தல் (யா)
என்குடல் நடுநடுங்க—மனிதீர்
என்குல மைந்தரை எனறுப்பீர்! (யா)
வாயில்லாப் பிள்ளேகளே—ஐயையோ
வதைத்திடும் வாழ்வுமக் காகிடுமோ (யா)
ஐமையோர் தம்பி யென்றால்—அவனே
உரித்துண்ணத் துணிவீரோ கருத்துடனே! (யா)
எமனுக்குப்பயப்படுறீர்—நீரே
எமன்பிற வுயிர்களுக் காகுவீரோ? (யா)
வயிறென்ன சுடுகாடோ—உங்கள்
மனமென்ன புலிகளின் புதர் வீடோ? (யா)
இன்னமு மறிவிலேயோ—ஐயையோ
என்பெயர் சொல்லியோ கொலேபுரிவீர்! (யா)

நில்லுங்கள் மனிதர்களா !—இனி
நீருய்யக் கருதிடின் சீருடனே, (யா)
பாற்பொங்கல் பழந்தேங்காய்—மனப்
பத்தியிற் படைத்திடின் பலனளிப்பேன். (யா)
உயிர்களைக் காத்திடினே—மனிதீர்
உங்குலம் வாழ்ந்திடும் முறுதியிதே ! (யா)
வாழுங்கள் கொலை விடுத்தே—உம்மை
வாயாற வாழ்த்துவேன் மாந்தர்களா ! (யாரிங்கு)

---

## கொலைத் தொழிலும் மாமிசமும் ஒழித்த 'பறையன்' கூறுவது.

(ஆண்டிப்பண்டாரம் என்ற மெட்டு.)

வேண்டாம் வேண்டாம் விடுவீர்
வேதனை செய்யும் தொழில்கள் (வேண்டாம்)

சரணங்கள்.

மாண்டால் வருமோ இம்
மானிடதேக மீண்டு
ஆண்டானுரைத்தபடி
ஆடு கோழியை வதைக்க (வேண்டாம்)
தின்றவன் வாயதனைத்
தின்னாதவன் மோந்தால்
நன்றாய்ப் பிணத்தின் நாற்றம்
நாறிடும் அதனால் என்றும் (வேண்)
ஆட்டுக்கறியதனை
ஆவலாய்வாங்கி யுண்போன்
காட்டினில் வாழும் கரடி
பேய் புலியாய்ப் பிறப்பான் (வேண்)
பள்ளர் பறையர்களில்
பாபமென்றேபல பேர்
தள்ளிவிட்டார் இதை நீர்
தள்ளயின்றிப் புசிக்கலாமோ ? (வேண்)

## அம்மன் சந்நதியில் ஆடு கோழிகள் முறையிடுதல்.

("பத்தினிக் கர்ணகையே" என்ற மெட்டு)

பல்லவி.

அபயம் அபய மம்மா—எங்கள்
அம்பிகை மாரி, தாயே
சமய மிது எங்களைக்—காக்க
தட்சணமே வருவாய் (அபயம்)
ஆடுகளாய்ப் பிறந்தோம்—காடு
மேடுகளில் வளர்ந்தோம்
வேடரைப்போன்ற தீயர் எம்மை
வீணுப் மடிக்கின்றனர் (அபயம்)
உந்தன் பேரைச் சொல்லியே—எங்கள்
உயிரை மடிப்பதனுல்
நிந்தனை உந்தனுக்கே வந்து
நேருமடி உமையே— (அபயம்)
கேள்வி முறையில்லையோ—நெஞ்சில்
கிருபை யென்பதில்லையோ
மாள்கின்றோம் பல கோடி மனிதர்
மனந்தான் என்ன கல்லோ— (அபயம்)
எங்கள் தலையினிலே—பிரமன்
இவ்வா றெழுதினனே?
அங்கமுருகுதடி—எங்கள்
அம்பிகை மாரி, தாயே (அபயம்)
பாவி மனிதரெல்லாம்—எம்மைத்
தாவிப் பிடித்து வந்து
ஆவி துடிக்கக் கொன்று—தங்கள்
நாவு ருசிக்கத் தின்பார் (அபயம்)
மக்கள் மனைவியர்க்கோ—பெரும்
துக்கம் நோக்காடு வந்தால்

திக்கற்ற எங்களையே—பலி
அக்ரமமாய்த் தருவார் (அபயம்)
பொங்கல் பழமில்லையோ—நல்ல
பூவுந் தேங்காய் இல்லையோ
சங்கரி உந்தனுக்கு—அவைகள்
சம்மத மாகலையோ? —(அபயம்)
நல்ல புத்தி தருவாய்—அம்மா
நாட்டுள்ள மனிதருக்கே
நாகத்தில் வீழாமல்—அவர்களை
நல்வழி கொண்டுவாராய் (அபயம்).

---

## தெய்வத்தோடு முறையீடு.

ராகம் இந்துஸ்தான் தோடி—தாளம் ரூபகம்.
வேலனே இந்த வீணனை என் படைத்தாய்— என்ற
வர்ணமெட்டு.

பல்லவி:—தெய்வமே இந்த தீவினை அகற்றிடுவாய்—இங்கு
அனுபல்லவி:— ஜெகமீதிலே கொலைபாதகம் தொழி
லாகவே செய்கின்றனர்—தெய்வமே
சரணம்:—(1) இப்புவி தன்னிலே, இரக்கமிலாமலே
ஏழை உயிர்களை இம்சிக்கின்றார்களே;
ஒப்புமோ தெய்வம் உலகத்திலுள்ளோரும் [கின்றனர்
உணராமலே, கொலை பாதகம், துணிவாகவே செய்
(தெய்)
(2) வைசூரி காலரா வாந்திபேதி பிளேக்கு
வந்து விட்டாலது அம்மன் குற்றமென்பார்
சுத்தப்பிசகான வார்த்தைகள் பேசியே
சுளுவாகவே, கொலைகள் பல, விதமாகவே புரிகின்றனர்
(தெய்)
(3) ஆடுகொழிகளை அறுக்கும் போதந்த
அபயக்குரலோசை அம்மனும் கேட்கிருள்
அம்மனின் கோபத்திற்காளாகி நிற்கின்றூர் [னர்
ஐயோயிவர், அனியாயமாய், நரகில்விழத் துணிகின்ற
(தெய்)

1861(6)
சென்னை-600

ஓம்

கொல்லாவிரதம் குவலயமெல்லாம் ஓங்க!

# தெய்வ பக்தியும் ஜீவகாருண்யமும் நிறைந்த சகோதர சகோதரிகாள்!

நம் நாட்டு ஜனங்கள் வாயில்லா ஜீவன்களைக் காப்பாற்றுங் கடமையை விட்டு அவற்றைத் தெய்வபலிக்கென்றும் தம் வயிற்றுக்கென்றும் கொல்வதன்றி, அவற்றைப் பலவாறாக ஹிம்சையும் செய்யலாயினர். அத்தகையோர்க்கு அஹிம்சா தருமத்தையும் வாயில்லா ஜீவன்களிடத்து கருணையையும் போதித்து மிருக பலியைக் கைவிடச் செய்து மரக்கறி உணவை மேற்கொள்ளும்படி தீவிர பிரசாரம் புரிவதற்காக இறைவனருளாலும் பல கனதனவான்களது முயற்சியாலும் சென்னையில் தென்னிந்திய ஜீவரட்சா பிரசாரக சபை நிறுவப்பட்டுள்ளது. சகோதர சகோதரிகளே! சபையின் பஜனை கோஷ்டியும் உபன்யாசகர்களும் தினந்தோறும் சென்னை நகரிலும் அதன் சுற்றுக் கிராமங்களிலும் ஒவ்வோர் பாகத்திற்குஞ் சென்று போதிப்பதன்றி, புலால் உணவை விடுகின்றவர்களிடமிருந்து உறுதி மொழியும் வாங்குகின்றனர். ஆயிரக் கணக்கான துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப் படுகின்றன. பலியிடும் கோயில்களுக்கு உத்சவ காலங்களில் சென்று தீவிர பிரசாரம் செய்யப் படுகிறது.

மேற்கூறிய பெரிய வேலைகளுக் கெல்லாம் ஏராளமான பணமும், தொண்டர்களும் அவசியமென்பது நாம் கூறாமலே விளங்கும். சகோதர சகோதரிகளே, உங்களுக்குப் புண்ணியத்தையும் கடவுள் கிருபையையும் வாயில்லா ஜீவன்களின் வாழ்த்தையும் பெருவதற்குத் தகுந்த சந்தர்பம் வாய்த்திருக்கிறது. 'பலதுளி பெருவெள்ள' மாகு மாதலின், நீவிர் ஒவ்வொருவரும் தம்மாலான பண உதவியைச் செய்து உங்கள் கடமையைத் தவறாது செலுத்த வேண்டுகிறோம். பணம் அனுப்புகிறவர்கள் மணியார்டராகவோ, தபால் ஸ்டாம்புகளாகவோ கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பலாம்.

வேறு விபரங்களுக்கும் சபையின் பிரசுரங்களுக்கும் தங்கள் விலாஸத்தை தெரிவிக்கவும்.

இங்ஙனம் தங்கள் அன்புள்ள,
காரியதரிசிகள்.

தென்னிந்திய ஜீவரட்சா பிரசாரக சபை.
436, தங்கசாலை வீதி, மதராஸ்.